# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **306/2015**

ஆணை எண். **88/2016**

நாள் : **06/04/2016**

**திருமதி து. தங்கமாரி,
ஒன்றிய குழுத் தலைவர்,
ஊராட்சி ஒன்றியம்,
வாசுதேவ நல்லூர்,
சிவகிரி தாலுகா, திருநெல்வேலி
மாவட்டம்** — **முறையீட்டு மனுதாரர்**

**வட்டாட்சியர் அவர்கள்,
சிவகரி தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம்** — **எதிர் மனுதாரர்**

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவ நல்லூரைச் சேர்ந்த திருமதி து. தங்கமாரி அவர்கள், தங்களது கிராமத்தைச் சேர்ந்த மலைப்பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதனை அகற்றித் தருமாறு செய்த புகார்மனு, இவ்வலுவலகத்தில் 06.04.2015 அன்று பெறப்பட்டு, 306/2015 என்ற எண்ணிட்ட புகார் மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆணை

2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், விதி 2(7) இன் படி ' உள்ளாட்சி அமைப்பு ' என்பதற்கான பொருளில் " ஊராட்சி மன்றம் " மற்றும் " ஊராட்சி ஒன்றியம் " என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, முறையீட்டுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்முறையீட்டு மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தாக்கல் செய்யுமாறு தனியரை கேட்டுக் கொள்ளலாம் என முடிவு செய்து ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்

பெறுநர்

திருமதி து. தங்கமாரி,
ஒன்றிய குழுத் தலைவர்,
ஊராட்சி ஒன்றியம்,
வாசுதேவ நல்லூர்,
சிவகிரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி.